[1992 மார்ச் 9

137—

மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்.

*6091 திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து உரிய பரிந்துரைகள் செய்ய, மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் (State Commission on SC and ST) அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இதுபோன்ற ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதா என்றும், அப்படி அமைக்கப்பட்டிருப்பின் அதன் முழு விபரங்களையும் கொடுக்குமாறு, ஆந்திர பிரதேச மாநில அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. அம் மாநில அரசிடமிருந்து பதில் கிடைத்தவுடன் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசினுடைய சமீபத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் தொகை ஒரு கோடிக்கும் சற்று அதிகமாக வருகிறது. இப்படி மிகப் பெரிய அளவில் வாழக்கூடிய இந்த தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுடைய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் நசுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமூகத்தின் அடித் தளத்திலே வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்து மாநில அரசுக்குப் பரிந்துரை செய்ய இதுபோன்ற ஒரு ஆணையம் மிகவும் அவசியம் ஆகிறது. அதுமட்டுமல்ல, இந்திய அளவில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

1992 மார்ச் 9]

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் இதுபோன்ற ஒரு ஆணையம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே எதையும் விரைந்து முடிக்கக்கூடிய ஆற்றல் நிரம்பிய புரட்சித் தலைவியினுடைய புனித ஆட்சியில் குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பேர்பட்ட ஆணையம் அமைக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்விலும், சமூகத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநில அரசிடமிருந்து அதன் அமைப்பு, அதிகாரம், பணிகள் மற்றும் தகுதி ஆகியவை குறித்த விவரங்கள் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. பதில் இன்னும் வரவில்லை. பதில் கிடைக்கப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கமிஷன் மத்திய அரசிலேயும் நம்முடைய அரசியல் சட்ட விதிகளின்படி தொடர்ந்து அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மராட்டியத்திலும், பீகாரிலும், உத்தர பிரதேசத்திலும் இப்படிப்பட்ட கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்து மாநிலமான ஆந்திராவிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது. கர்நாடகத்திலும் கூட தற்காலிகமான காலவரையறையுடன் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. 18 விழுக்காடு என்பது முறையாகச் செயல்படுத்தப்பட்வில்லை; சில இடங்களில் ஓப்பன் காம்பெட்டிஷனில் இருப்பதைக்கூட இந்தக் கணக்கிலே சேர்த்துக் கொடுத்துவிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும். 18 சதவீதம் என்பது பெரிய பிரச்சினை.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிச் சான்றிதழ்கள் பல பெருகி அதன்மூலம் பலர் உயர்பதவிகளுக்குக் கூட வந்துவிடுகிறார்கள். அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தருகிற பல்வேறு சலுகைகளைக் கூட சிலர் பினாமியாகப் பயன்படுத்திவிடுகிறார்கள். எனவே, இவைகளை எல்லாம் முறைப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட கமிஷன் அத்தியாவசியமாகத் தேவை. தமிழக அளவில் குறைந்தபட்சம் ஒரு ஆலோசனைக் குழு என்ற அளவில் கூட வெகு நாட்களாகப் போடப்படாமல் இருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அது அமைக்கப்பட வேண்டும். அதை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 9

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் காலத்தில்தான் ஆதிதிராவிட மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எஸ்.எஃப்.சி. அதாவது ஸ்டாண்டிங் ஃபைனான்ஸ் கமிட்டி நடக்கிறபோது, அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே இந்த ஆதிதிராவிட மக்களின் கல்வித் தரம் உயர்த்தப்படவேண்டுமென்று சொல்லி, அதற்காக நூல் நிலையத்தை உருவாக்கவேண்டும் என்று 12.5 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு எந்த அரசும் எடுக்காத அளவுக்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்களிடத்திலேயிருந்து கோரிக்கை வராமலேயே, சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கையையும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியிடம் எடுத்துச் சொல்லி உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 138, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

138—

மீன் வளர்ச்சிக் கழக தினச்சம்பள பணியாளர்களை நிரந்தரம் செய்தல்.

*765 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் பல ஆண்டுகளாக தினச்சம்பள அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு நிரந்தரம் செய்யப்படாமல் தொழிலாளர் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் பணி நாட்களை கணக்கில் கொண்டு தொழிலாளர் நல அடிப்படையில் அவர்களை நிரந்தரப் பணியமர்த்த அரசு முன்வருமா ?